(2) செடிப் பாதுகாப்புக்குரிய இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம், வாழைக்கன்றுகளுக்கு நோய் பரவாமல் பாதுகாத்தல்.

(3) பரிந்துரைக்கப்பட்ட அளவில் உரங்களைப் பயன்படுத்தல்.

(4) மேம்பாடடைந்த, வேளாண்மை, பொருளாதார முறைகளை மேற்கொள்ளல்.

(5) செடிப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(உ) இல்லை.

திரு. வி. ஏஸ். எஸ். மணி : ஸார், அதி தீவிர வாழை சாகுபடித் திட்டத்தின் கீழ் திண்டுக்கல்லில் தனி விவசாய அதிகாரி நியமிக்கப் பட்டுள்ளார். அவர்களால் லோன் ப்ரொபோஸல்கள் 200-க்கு மேல் க்ரெடிட் சொஸைட்டிகளுக்கு அனுப்பப்பட்டன. அவைகள் காரணம் இல்லாமல் நிராகரிக்கப்பட்டன. எனவே விவசாயிகளுக்குத் தொல்லையாக இருக்கிறது. க்ரெடிட் சொஸைட்டி மூலமாக வழங்குவதைத் தவிர்த்து டிபார்ட்மெண்ட் மூலமாகக் கொடுத்து விடச் செய்தால் விவசாயிகளுக்கு சௌகரியமாக இருக்கும் என்று சொல்லுவதுடன், ஏன் அவ்விதம் செய்யக் கூடாது என்று கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : விவசாய இலாகா மூலமாக ப்ளான் தயார்செய்து கூட்டுறவு மூலமாகத் தான் கொடுக்கிறார்கள். விவசாய இலாகா மூலமாக இல்லை.

திரு. கோ. சி. மணி : ஆடுதுறை வாழை ஆராய்ச்சிப் பண்ணை சார்பாக, கடன் வழங்கும் முறையில் இருக்கும் கோளாறுகளைப் பற்றிப் பரிசீலனை செய்து நல்ல ரிப்போர்ட் அனுப்பப்பட்டிருக்கிறதா ? அதன் விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

உப்பளங்கள் (பழைய காயல்)

* 438 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா பழைய காயல் ஹரிஜனங்களின் உப்புப் பாத்திகளுக்கு வண்டி, லாரி செல்ல பாதை கோரி கடந்த 10 ஆண்டுகளாக முறையிட்டு வந்தார்களா ?

(இ) அதன்மீது எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

(உ) ஹரிஜனங்கள் கோரும் பாதையைத் தவிர்த்து வேறு சுற்று வழியாக பாதை அமைக்க ஆர்ஜித நடவடிக்கை எடுத்து வருவது உண்மையா ?

(எ) ஹரிஜனங்கள் கோரும் வழியாக பாதை அமைத்துக் கொடுப்பதில் என்ன கஷ்டமிருக்கிறது ?

5th November 1966]

(ஐ) ஹரிஜனங்கள் கோரும் வழியாக தற்போது லாரி வண்டி செல்லும் பாதை இருந்து வருவதும் அப்பாதை வழியாக லாரிகள் சென்ருல் அதன் உரிமையாளர் லாரி ஒன்றுக்கு ரூ. 3.00 வரை கட்டணம் பெற்று வருவது சர்க்கார் அறிவார்களா ?

(ஒ) புதிதாக ஆர்ஜிதம் செய்யும் நிலத்தின் அளவென்ன ?

(ஔ) எத்தனை பட்டாதாரர்கள் ?

(அஅ) முதலில் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுத்த நிலத்தில் எத்தனை பட்டாதாரர்கள் ? நிலத்தின் அளவென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) முதல் (அஅ) வரை : சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சபை முன்பு வைக்கப்பட்ட விவர அறிக்கையிலிருந்து இந்த ஆர்ஜித நடவடிக்கை 1958-ம் வருஷத்திலே ஒரு குறிப்பிட்ட நிலத்தைப் பொறுத்து எடுக்கப் பட்டது என்ற விவரம் தெரிகிறது. அதிலே 45 பேர்களில் இரண்டு பேர்கள் மாத்திரம் ஆட்சேபணை செய்ததாகவும். அதன் காரண மாக வேறு 44 பேர்களுடைய நிலத்தை முன்பு 3 ஏக்கர் 3 செண் டுக்கு பதிலாக இப்பொழுது 7 ஏக்கர் 14 செண்டு நிலத்தை எடுத்து கொள்ள நில ஆர்ஜித வேலை நடக்கவேண்டும் என்று கருதி, ஒரு வருஷ காலமாக நில ஆர்ஜித வேலை பூர்த்தி பெருத நிலைமைக்கு என்ன காரணம்? நான் அறிந்த மட்டில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்துக்கு சொந்தக்காரர்களாக இருக்கக்கூடிய இரண்டு பேர்கள் தடுத்தார்கள் என்பதற்காக வசதி குறைந்த ஏழை மக்களாகிய 44 பேர்களுடைய நிலத்தை, குறிப்பாக பர்மா, சிலோன் நாடுகளிலிருந்து வந்தவர்கள் நிலத்தை இப்பொழுது ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிற விவரம் அரசாங்கத்திற்கு தெரியுமா? இரண்டு பேர்கள் ஆட்சேபணையை பொருட்படுத்தாமல் முன்பு ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்ட பழைய நிலத்தையே ஆர்ஜிதம் செய்து எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே, முதலில் இங்கே ஒரு ரோடு அமைப்பதற்கு பிரயத்தனம் செய்யப்பட்டது. அப்பொழுது வில்லங்கங்கள் வந்து, விஷயம் கோர்ட்டுக்குப் போயிற்று. பிற்பாடு அதைப் பரிசீலனை செய்து கலெக்டர் அவர்கள் நேரில் சென்று எந்த நிலத்தை ரோடுக்கு எடுத்துக்கொண்டால் நல்லது என்று பார்த்து செய்கிருர்கள். கடைசியாக கலெக்டர் இந்த நிலத்தை எடுத்துக் கொண்டால் நல்லது என்று தெரிவித்திருக்கிருர். அங்கு இருக்கும் அரிஜன மகாஜனங்களும் இந்த இடத்தை விரும்புகிருர்கள். ஜனங்களும் இதை விரும்புகிருர்கள். இது தான் சௌகரியம் என்று அவர்கள் சொன்னதன் காரணமாக கலெக்டர் அவர்கள் இப்படி ஏற்பாடு செய்திருக்கிருர்.

---

[a] 403–405-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.